# ஏப்ரல் 29 - திங்கள்

## தூய சியன்னா கத்தரின்

## “ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது” (யோவா 3:5)

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி 4 : 23 - 31**

அந்நாட்களில் விடுதலை பெற்ற அவர்கள், தங்களைச் சேர்ந்தவர்களிடம் வந்து, தலைமைக் குருக்களும் மூப்பர்களும் தங்களுக்குக் கூறிய யாவற்றையும் அறிவித்தார்கள். இவற்றைக் கேட்ட யாவரும் ஒரே மனத்துடன் தங்கள் குரலைக் கடவுள்பால் எழுப்பி, பின்வருமாறு மன்றாடினர் ”ஆண்டவரே, ”விண்ணுலகையும் மண்ணுலகையும் கடலையும் அவற்றிலுள்ள அனைத்தையும் படைத்தவர் நீரே”. எங்கள் தந்தையும் உம் ஊழியருமாகிய தாவீது வாயிலாக தூய ஆவி மூலம் ”வேற்றினத்தார் சீறி எழுவதேன்? மக்களினங்கள் வீணாகச் சூழ்ச்சி செய்வதேன்? பூவுலகின் அரசர்களும் தலைவர்களும் ஆண்டவருக்கும் அவர்தம் மெசியாவுக்கும் எதிராக அணிவகுத்து நின்றனர்” என்று உரைத்தீர்.
அதன்படியே இந்நகரில் உம்மால் அருள்பொழிவு பெற்ற உமது தூய ஊழியராகிய இயேசுவுக்கு எதிராக ஏரோதும் பொந்தியு பிலாத்தும் பிற இனத்தவரோடும் இஸ்ரயேல் மக்களோடும் ஒன்று திரண்டனர். உமது கைவன்மையும் உமது திட்டமும் குறித்து அனைத்தையும் அவர்கள் செய்து முடித்தனர். இப்போதுகூட ஆண்டவரே, அவர்கள் அச்சுறுத்துவதைப் பாரும். உம் அடியார் முழுத் துணிவுடன் உமது வார்த்தைகளை எடுத்துக்கூற அருள் தாரும். உமது தூய ஊழியர் இயேசுவின் பெயரால் உமது கையை நீட்டி நோயுற்றோருக்கு நலமளியும் அடையாளங்களும் அருஞ் செயல்களும் நடைபெறச் செய்யும்.” இவ்வாறு மன்றாடியவுடன் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது. அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தை களைத் துணிவுடன் எடுத்துக் கூறினர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம்மிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.

**நற்செய்தி : யோவான் 3 : 1 – 8**

அக்காலத்தில், பரிசேயர் ஒருவர் இருந்தார் அவர் பெயர் நிக்கதேம். அவர் யூதத் தலைவர்களுள் ஒருவர். அவர் ஓர் இரவில் இயேசுவிடம் வந்து, ”ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். கடவுள் தம்மோடு இருந்தாலன்றி, நீர் செய்யும் இவ்வரும் அடையாளங்களை யாரும் செய்ய இயலாது” என்றார். இயேசு அவரைப் பார்த்து, ”மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்” என்றார். நிக்கதேம் அவரை நோக்கி, ”வயதானபின் ஒருவர் எப்படிப் பிறக்க முடியும்? அவர் மீண்டும் தாயின் வயிற்றில் புகுந்து பிறக்க முடியுமா?” என்று கேட்டார். இயேசு அவரைப் பார்த்து, ”ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்கிறேன். மனிதரால் பிறப்பவர் மனித இயல்பை உடையவர். தூய ஆவியால் பிறப்பவர் தூய ஆவியின் இயல்பை உடையவர். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உமக்குக் கூறியது பற்றி நீர் வியப்படைய வேண்டாம். காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை உமக்குக் கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும் எங்கு செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது. தூய ஆவியால் பிறந்த அனைவருக்கும் இது பொருந்தும்” என்றார்.

**தியானம் :** நாம் மீண்டும் பிறக்க வேண்டும். எவ்வாறு? மறு பிறவியா? அல்ல, மாறாக எமது தவறான தீய வாழ்வில் இருந்து விடுபட்டு புதிய வாழ்வில் வாழ வேண்டும். இதுதான் மறு பிறப்பு. கொடிய நோயின் பிடியில் இருந்து விடு பட்டவர்கள், இது கடவுள் எனக்கு தந்த மறு வாழ்வு என்பார்கள். அந்த நோயினால் கஸ்டப்பட்டவர்களுக்குத்தான் அதன் வேதனையும் வலியும் புரியும். அனுபவிக்கின்றவ ர்களுக்குத்தான் அது விளங்கும். நற்செய்தியில் யேசு நாம் தூய ஆவியினால் பிறக்க வேண்டும் என்று கூறுகின்றார். உண்மையில் திருச்சபையின் பெரு விழாக்களில் பரிசுத்த ஆவிக்கு எடுக்கப் படும் பெந்தகோஸ்த்தே விழாதான் மிக முக்கியமானது. ஆனால் நாம் அதற்கு முக்கியம் கொடுப்பதில்லை. ஆவியானவர்தான் பூட்டிய அறைகளுக்குள் முடங்கிய சீடரை வெளியே அழைத்து வந்தார். அவர்களின் பயத்தை அகற்றி தைரியப் படுத்தினார். துணையாளரை அனுப்புவேன் என்று யேசு சொன்னதும் இவரைப் பற்றியே. அவர் நமக்கு கற்றுத்தருகின்றார். வழி நடத்துகின்றார். ஆவியாரின் செயற்பாட்டிற்கு நாம் நம்மை ஒப்படைக்கும்போது நாமும் ஆவியினால் புதுப்படைப்பாக மாறுவோம். இன்றைய நாளில் நாம் நினைவு கூரும் சீயன்னா கத்தரின் அம்மா இதனை வாழ்ந்து காட்டினார். தமது சகோதரி இறந்த பின் அவரின் கணவரை மணமுடிக்க பெற்றோர் வற்புறுத்தியபோது, அதற்கு உடன்படாமல் தாம் கடவுளுக்கு தொண்டு செய்யவேண்டும் என்று உண்ணா நோன்பிருந்து, அதனால் அவரின் பெற்றோர் மனம் மாற தமது வாழ்வை கடவுளுக்காக அர்ப்பணித்தார். நோயுற்றவர்களுக்கு உதவி செய்தார். சமாதானத்திற்காக பாடுபட்டு புனிதையாக தமது 33ம் வயதில் மரித்தார். இவரின் வாழ்வு எமக்கும் நல்ல வழி காட்டட்டும். எனவே ஆவியாரின் துணையுடன் இறை அரசை கண்டடைவோம்.